மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவரவர்களே, புதிதாகத் துவங்கப்படும் தொழிற்சாலைகள் மாக கட்டுப்பாடு வாரியத்தின் கீழ் வருகின்றன. அவர்கள் மனுச் செய்கிறார்கள். அதைப் பரிசீலித்து, இந்த வாரியம் அனுமதித்த பிறகு தான் தொழிற்சாலை இயங்க முடியும்.

(உ) அடையாறு ஓரத்தில் வெள்ளத்தடுப்பு சுவர் கட்டுவதில் தாமதம்

திரு. சைதை. சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, "அடையாறு ஆற்றின் ஓரத்தில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுகிற பணி துவங்குவதில் கால தாமதம் ஏற்படுவதால் அப்பகுதி வாழ் மக்களுக்கு ஏற்படும் வெள்ள அபாயம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. கே.கே. எஸ்.எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சென்னையில் உள்ள அடையாறு ஆற்றுக்கு கடந்த 1085 நவம்பர்-டிசம்பர் வெள்ளத்தால், பெரும் சேதம் ஏற்பட்டது. அடையாறு ஆற்றினை மேம்பாடு செய்யு மைய அரசு ரூ. 2 கோடி வழங்கியது. அடையாறு வெள்ளச் சேதங்களை தவிர்ப்ப தற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து அறிக்கை தர அரசு 1986 பிப்ரவரி மாதம் ஒரு வல்லுநர் குழு நியமித்தது. அடையாறு ஆற்றுக்கு மேம்பாடு செய்ய ரூ. 12 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ள குழு பரிந்துரை செய்துள்ளது. வல்லுநர் குழு அறிக்கையின் அடிப்படையில், சில முக்கியமான பணிகளை உடனடியாக மேற்கொள்ள ரூ. 2 கோடி மதிப்பீட்டிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

2. இதில் அடையாற்றின் இடது கரையில் ஜாபர்கான் பேட்டை தாழ்பாலம் முதல் மறைமலை அடிகள் பாலம் வரை தடுப்புச் சுவர் கட்டுதலும், நந்தம்பாக்கம் பாலத்திலிருந்து கத்திப்பாரா தாழ்பாலம் வரை ஆற்றை அகலப்படுத்தி, ஆழப் படுத்துதலும் முக்கியமான பணிகளாகும். முதல் கட்டமாக, அடையாற்றில் ஜாபர்கான்பேட்டை முதல் கத்திப்பாரா தாழ்பாலம் வரை ஆற்றின் இடது கரையில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டும் வேலை துவங்கப்பட்டுள்ளது.

1987 ஏப்ரல் 3] (திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச் சந்திரன்)

3. தடுப்புச் சுவர் கட்டும் பணியினை விரைவாக முடிக்கும் பொருட்டு, இப்பணி 11 சிறு பகுதிகளாக பிரிக்கப்பட்டு, கடைக்கால் முழுவதும் தோண்டப்பட்டு, ஆறு பகுதிகளில் கடைக்கால்கற்காரை (Foundation Concrete) போடப்பட்டுள்ளது. மூன்று பகுதிகளில் கருங்கல் கட்டிடப்பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணிக்கு 28-2-1987 வரை ரூ. 50.00 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளது. இப்பணி 31-3-1987-க்குள் முழுமையாக முடிக்கப்படும்.

4. இது தவிர, மறைமலை அடிகள் பாலத்திற்கு கீழ் கோட்டூர்புரம், நந்தனம் பகுதிகளில் ஆற்றின் இரு கரைகளிலும் தடுப்புச் சுவர்/கரைகள் அமைத்தல் சம்பந்தமாக பூண்டியில் மாதிரிப் படிவங்கள் ஆராய்வு செய்யப்பட்டு வருகின்றன.

[முற்பகல் 11—20]

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது போல நந்தம்பாக்கம் பாலத்திலிருந்து கத்திப்பாரா தரைப்பாலம் வரை கரை கட்டவும், அகலப்படுத்தி ஆழப்படுத்தவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதிலே கத்திப்பாரா தரைப்பாலத்தின் அருகாமையில் ஆற்றின் நடுவில் தனியார் சொந்தமாக இடத்தை வைத்துக் கொண்டு பயிர் செய்து கொண்டிருக்கின்றார்கள். அது வேடிக்கையாகவும் விநோதமாகவும் இருக்கின்றது. அரசுக்குச் சொந்தமான ஆற்றின் நடுவிலே தனியார் எப்படி சொந்த பட்டா பெற முடியும். மணல் திட்டாக அந்த பகுதி இருக்கின்றது. அந்தப் பகுதியிலே அடிக்கடி வெள்ள அபாயம் ஏற்படுகின்றது. ஆஸ்பிட்டல் சாலை மற்றும் கஸ்டம்ஸ் காலனி, பாதிக்கப்படுகின்றன. அங்கு தனியார் சொந்தமாக்கிய அந்த நிலத்தை கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதைப் போல அங்கே அரசாங்கத்திற்கு சொந்தமான இடத்தை தனியார் ஆக்கிரமித்து பயிர் செய்து கொண்டு இருக்கின்றார்கள் என்று அரசுக்கு தெரிய வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கரை கட்டுகின்ற வேலை கத்திப்பாரா தரை பாலத்தில் இருந்து நடைபெற்று வருவதாகவும் அது மறைமலை அடிகளார் பாலம் வரை நடப்பு ஆண்டில் தொடங்கி நடைபெறுவதாகவும் இருக்கின்றது. அங்கே கரை கட்டுவதால், இந்த ஆற்றிலே துணி துவைக்கின்ற சலவையாளர்கள்

(திரு. சைதை சா. துரைசாமி) [1987 ஏப்ரல் 3

உள்ளே செல்லமுடியாத நிலை ஏற்படுகிறது. அப்படிக் கட்டப் படுகின்ற கரையில் சலவையாளர்கள் ஆற்றிலே இறங்கி துணி துவைக்கின்ற அளவுக்கு படி வசதி அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையைப் பற்றி அதிகாரி களோடு கலந்துகொண்டு சாத்தியக்கூறுகள் அறிந்து வேண்டிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

4. அறிக்கைகள் அளித்தல்.

(அ) பொதுக் கணக்குக் குழு.

Thiru T. Venkata Reddy: Hon'ble Deputy Speaker Sir, on behalf of the Chairman of the Committee on Public Accounts, I present the following Reports of the Committee :

(1) Fifty-fourty Report of the Committee on Public Accounts on the paragraphs pertaining to Revenue Department in the Report of the Comptroller and Auditor General of India for the year 1982-83. (Revenue Receipts)

(2) fify-fifty Report of the Committee on Public Account on the paragraphs pertaining to Home Department in the Report of the Comptroller and Auditor General of India for the year 1982-83. (Revenue Receipts).

(ஆ) பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கைகளை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) பொதுப் பணித்துறை குறித்த பத்திகள் மீதான மேற்படி குழுவின் ஐம்பத்தொன்றாவது அறிக்கை.

(ஆ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83ஆம் மற்றும் 1983-84ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) மின்னணுவியல், அறிவியல்-தொழில் நுட்பவியல் துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் ஐம்பத்தி இரண்டாவது அறிக்கை.